செய்தி வெளியீடு எண் : 1166 நாள் : 13.06.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (13.06.2023) அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்ற நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள் பிரிவில் ஒன்றிய அரசின் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி துவக்க விழா நிகழ்ச்சியில் ஆற்றிய உரை**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம்.

தமிழ்நாடு திறன் மேம்பாடு கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநர்

திருமதி இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்களே,

வேலைவாய்ப்பு பயிற்சித்துறையின் ஆணையர் திரு. கே. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்களே,

மற்றும் வந்திருக்கக்கூடிய அதிகாரிகள்

திரு. சுதாகர் அவர்களே,

திரு. ஜெயபிரகாஷ் அவர்களே,

மாணவ–மாணவிகளே,

பத்திரிகை நண்பர்களே,

நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள் பிரிவின் மூலம் சென்னையில் உள்ள மாணவர்களுக்கு Staff Selection Commission, Indian Railway Service, Institute of Banking, Personnel Service போன்ற ஒன்றிய தேர்வுகளுக்கான பிரத்யேக பயிற்சி மையத்தை தொடங்கி வைப்பதில் நான் இன்று மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்நாடு கல்வியில் தலை சிறந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பள்ளிக்கல்வி, உயர் கல்வியிலும் நம்முடைய மாநிலத்தின் நிலை என்பது தேசிய சராசரியை விட அதிகமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பல்வேறு திட்டங்களாலும் சீரிய முயற்சிகளாலும் கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்க ஒரு முக்கிய காரணமாக இன்று அமைந்துள்ளது. இன்றைக்கு தமிழ்நாட்டில்

இருக்கக்கூடிய வீடுகளில் உள்ள பல்வேறு முதல் தலைமுறை மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் என அனைவருமே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கல்விக்காக தீட்டிய பல்வேறு திட்டங்களால் தான் இந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

இன்றைக்கு மாறிவரும் உலகிற்கு ஏற்ப இந்திய ஒன்றியம் மட்டுமன்றி ----பட்டதாரிகளுக்கு எப்படி வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று யோசித்து உருவாக்கிய திட்டம்தான் இந்த "நான் முதல்வன்" என்ற நல்ல மகத்தான ஒரு திட்டம்.

சில நாட்களுக்கு முன்பு நான் இந்த "நான் முதல்வன்" திட்டத்தின் திறன் பயிற்சி பெற்று அதன் மூலம் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்று அதில் வெற்றி பெற்ற நம்முடைய மாணவ, மாணவியர்கள் கிட்டத்தட்ட 1425 பேருக்கு ஆண்டுக்கு ஒன்பது இலட்சம் ரூபாய் வரை ஊதியம் பெறுகின்ற அளவுக்கான பணி நியமன ஆணைகளை சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நானே என்னுடைய கைகளால் வழங்கினேன்.

"நான் முதல்வன்" திட்டம் செயல்படும் சாதனையில் ஒரு பகுதியாக இன்றைக்கு இங்கு "நான் முதல்வன்" போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையத்தை இந்த அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் இன்று தொடங்கி வைக்கிறேன். என்னதான் நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் தனியார் நிறுவனங்களுக்கு வேலைக்கு சென்றாலும், அரசு அலுவலகங்கள் குறிப்பாக ஒன்றிய அரசினுடைய அலுவலகங்கள் எண்ணிக்கை என்பது ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகின்றது.

ஒரு காலத்தில் UPSC முடிவு வந்தால் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை நம்முடைய தமிழ்நாட்டு தேர்வர்கள் வென்றார்கள். இன்றைக்கு அந்த நிலை இல்லை. மாறிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறது. எனவேதான், எந்த ஒன்றிய அரசு அலுவலகங்களுக்கு சென்றாலும் நம்முடைய மாநிலத்தவர்கள் அதிகாரிகளாக இருப்பது சிறிது காலமாக, ஆண்டுக்காண்டு அது குறைந்து கொண்டே வருகின்றது. பல குக்கிராமங்களில் உள்ள பொதுத்துறை வங்கிகளில் ஹிந்தி உள்ளிட்ட வேறு மொழி பேசுபவர்களே அதிகளவில் மேலாளர்களாக இருக்கின்றார்கள். அதனால்தான் இங்கிருக்கக்கூடிய நம்முடைய பாமர மக்கள் வயதான குடிமக்கள், வங்கி சேவைகள் பெறுவதில் கொஞ்சம் சிரமப்படுகிறார்கள்.

மொழி ஒரு தடையாக இருப்பதால் அரசு சேவை, சேவை சென்றடைவதில் ஒரு தொய்வு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஒன்றிய அரசு தேர்வுகள் தமிழ் நாட்டு மாணவர்களும், அதிக அளவில் பங்கேற்று வெற்றி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தான் இந்த நான் முதலில் போட்டித் தேர்வுகளை நான் கடந்த மார்ச் மாதம் 7ஆம் தேதி தொடங்கி வைத்தேன்.

Staff Selection Commission, Indian Railway Service, Indian Institute of Banking, Personnel Service போன்ற தேர்வுகளுக்குக் கட்டணம் இல்லாமல் 100 நாட்களுக்கு பயிற்சி பெறும் இந்த திட்டத்திற்கு மாணவர்கள் மத்தியிலும், போட்டித்தேர்வு ஆர்வலர்களிடமும் மிகப்பெரிய அளவில் வரவேற்பதை நாம் காணமுடிகிறது. இந்தப் பிரிவு தொடங்கி வைக்கப்பட்ட மூன்றே மாதங்களில் இன்றைக்கு 29024 விண்ணப்பங்கள் வந்துள்ளன. பத்தாம் வகுப்பு மதிப்பெண், பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண், பட்டப்படிப்பில் பெற்றுள்ள சதவீதம் மற்றும் இடஒதுக்கீட்டு முறையில் 6900 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்துள்ளன. அதனால் கூடுதல் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு இன்று முதல் செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, சென்னையில் மட்டுமே 3042 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதிலிருந்து 450 பேரை தேர்வு செய்து, சென்னை மாவட்டத்தில் மட்டும் இன்று 3 பயிற்சி மையங்கள் துவங்கப்பட உள்ளன. அதில் ஒரு தேர்வு மையம் தான் இன்று நாம் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் தொடங்கி வைத்துள்ளோம்.

இதன் மூலமாக UPSC, Staff Selection Commission, Indian Railways ஆகிய தேர்வுகளுக்கு அதிக அளவிலான தேர்வாளர்களை நிச்சயம் தயார்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதுவரை Staff Selection Commission, வங்கித் தேர்வு, ரயில்வே தேர்வு போன்றவற்றுக்கு தயாராக வேண்டும் என்றால், நம்முடைய மாணவர்கள் டெல்லி போன்ற இடங்களில்தான் தனியார் பயிற்சி மூலம் தான் அதற்கான பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். அங்குள்ள பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து படிக்க வேண்டும் என்றால், மிகப் பெரிய அளவில் செலவு செய்ய வேண்டியிருக்கும். ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் அங்கெல்லாம் சென்று படிக்க இயலாத சூழல் இருந்தது.

இவற்றையெல்லாம் சரி செய்யும் நோக்கில்தான் இன்று இந்த "நான் முதல்வன்" போட்டித் தேர்வு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வெல்லும் நீங்கள், அடுத்தடுத்த தலைமுறைக்கும் எப்படி இது போன்ற தேர்வுகளுக்கு தயாராவது என்பது குறித்து ஆலோசனைகளை நீங்களும் வழங்க வேண்டியது அவசியம். உங்களுடைய ஒன்றிய அரசுப்பணி கனவு வெல்லட்டும், இங்கு பயிற்சி பெறவுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

\- - - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in